ந.க.எண். 15288/08/இ1

பேரூராட்சிகள் ஆணையரகம்,
குறளகம், சென்னை 108.

நாள். 18.8.08

**சுற்றறிக்கை**

பொருள்— பேரூராட்சிகளின் சொத்துக்கள் பாதுகாத்தல்—பொது திறவிடங்கள் தானமாக பெறப்பட்ட சொத்துக்களை பாதுகாத்தல்—அறிவுரைகள் வழங்குதல்—சார்பு

பார்வை— பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கான கையோடு

பேரூராட்சிகளுக்கு வருவாய்த்துறை மூலம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்கள் (Vested Porombokes) மனைப்பிரிவுகள் அங்கீகரிக்கும் பொழுது மனை அபிவிருத்தியாளர்களால் பேரூராட்சிகளுக்கு தானமாக ஒப்படைக்கப்படும் பொது திறவிடங்களான சாலைகள், பூங்கா பகுதிகள் போன்ற பொது சொத்துக்கள் பேரூராட்சிகளால் முறையாக பராமரிக்கப்படுவதில்லை எனவும், ஒரு சில நிகழ்வுகளில் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட புறம்போக்கு பகுதிகள் தனியரால் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டி அனுபவித்து வருகின்றனர் எனவும், மேலும் சில நிகழ்வுகளில் பேரூராட்சிக்கு மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களால் ஒப்படைக்கப்பட்ட பூங்கா பகுதிகள் மனைகளாக பிரித்து விற்பனை செள்ளப்பட்டு அவற்றில் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளன போன்ற நிகழ்வுகள் இவ்வாரணையரகத்தின் கவனத்திற்கு வந்துள்ளன. பேரூராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை மிகவும் கவனமாக பராமரிப்பது பேரூராட்சி செயல் அலுவலர்களின் தலையாய கடமையாகும். பேரூராட்சிகளின் சொத்துக்களை பாதுகாத்து பராமரித்திட அவ்வப்போது பல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் இதனை வலியுறுத்தி செயல் அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

- ⑥ வருவாய்த்துறை மூலம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு பகுதிகள் (lands in vested porambokes) ஒப்படைப்பு செய்யப்பட்ட புறம்போக்குகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் 100ரூ சரிபார்க்கப்பட வேண்டும்.
- ⑥ கிராம நிர்வாக அலுவலருடன், பேரூராட்சி செயல் அலுவலர் கூட்டாக கள ஆய்வு மேற்கொண்டு சரிபார்க்கப்பட வேண்டும்.
- ⑥ அங்கீரிக்கப்பட/அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்த பொது திறவிடங்களான (Open spaces) சாலைகள், பூங்காக்கள் போன்றவை மன்றத் தீர்மானத்துடன் ஏற்கப்பட்டு, மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களால் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மூலம் தானமான பெறப்பட்டு அசையா சொத்துகள் பதிவேட்டில் (Register of Immovable Properties) உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ⑥ ஏற்கனவே மனை அபிவிருத்தியாளர்களால் ஒப்படைக்கப்பட்ட பொது திறவிடங்கள் ஆக்கிரமிப்புகள் இன்றி உள்ளதா என்பதை கள ஆய்வு செய்து உறுதி செய்யப்பட வேண்டும்.
- ⑥ பேரூராட்சிக்கு பொது மற்றும் தனியார்களால் தானமாக ஒப்படைக்கப்பட்ட/ஒப்படைக்கப்படும் சொத்துக்கள் மன்றத்தின் ஒப்புதல் பெற்று சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.
- ⑥ பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களுக்கு பேரூராட்சியின் “செயல் அலுவலர்” பெயரில் வருவாய்த் துறையின் நில உரிமை பதிவில் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
- ⑥ நில உரிமைக்கான பத்திரங்கள்/நில உரிமை பெயர் மாற்ற (Patta) ஆவணங்கள் பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். பெயர் மாற்றம் செய்யப்படாத சொத்துக்களுக்கு உடனடியாக பெயர் மாற்றம் செய்து (Patta) ஆவணம் பெறப்பட வேண்டும். சொத்துக்களுக்கான ஆவணங்கள் இல்லாமல் இருப்பின் பதிவுத் துறை தொடர்பு கொண்டு நகல்கள் பெறப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

- ⑥ பேரூராட்சிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் தொடர்பான நில உரிமை, பத்திரங்கள், போன்ற ஆவணங்கள் (Scan) ஒளிப்படி செய்து கணிணியில் பதிவு செய்து நிரந்தரமாக பராமரிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக சொத்துக்கள் பதிவேட்டில் சான்று பதியப்பட்டு ஆண்டுதோறும் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும்.
- ⑥ பேரூராட்சியின் சொத்துக்களில் உரிய விவரங்களுடன் பேரூராட்சிக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதை குறிக்கும் நிரந்தர தகவல் பலகைகள் (Information Board) நிறுவப்பட வேண்டும்.
- ⑥ சொத்துக்களை முள்வேலியிட்டு பராமரிக்க வேண்டும்.
- ⑥ பேரூராட்சியின் சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பின் அவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு மீட்கப்பட வேண்டும்.
- ⑥ ஏற்கனவே ஆக்கிரமிப்பு தொடர்பாக வழக்குகள் ஏதேனும் நீதிமன்றத்தில் நிலுவையாக இருப்பின் அவற்றிற்கான சரியான தகவல்களுடன் கூடிய எதிர் உறுதி ஆவணங்கள் தாக்கல் செய்து வழக்கினை விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ⑥ பேரூராட்சிக்கு சொந்தமான ஏரி, குளம் பேன்ற நீர்நிலைகளில் எந்தவித ஆக்ரமனங்களும் அனுமதிக்கப்படக் கூடாது. ஆக்ரமனங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உடனடியாக அகற்றிட நடிவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ⑥ பேரூராட்சியின் நிலம்/தரை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்டிருப்பின் குத்தகை காலம் முடிந்த பின் குத்தகைதாரரிடமிருந்து மீட்கப்பட வேண்டும்.
- ⑥ பேரூராட்சியின் புறம்போக்கு பதிவேடு (Register of Porambokes) மற்றும் அசையா சொத்துக்கள் பதிவேட்டில் (Register of Immovable Properties) உள்ள அனைத்து சொத்துக்களும் ஒவ்வெரு வருடம் சனவரி மாதத்தில் சரிபார்க்கப்பட வேண்டும். அவ்வாறு சரிபாத்தமைக்கான சான்றிதழினை சம்பந்தப்பட்ட உதவி இயக்குநருக்கு பிரதி வருடம் சனவரி 15ம் தேதிக்குள் அனுப்புதல் வேண்டும்.

இவ்வறிவுரைகளை பின்பற்றி அனைத்து நடிவடிக்கைகள் மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடிவடிக்கை தொடர்பாக 31.8.2008க்குள் அறிக்கையினை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் அனுப்புதல் வேண்டும். உதவி இயக்குநர்கள் இது தொடர்பான தொகுப்பு அறிக்கையினை 2.9.2008க்குள் இவ்வானையரகத்திற்கு அனுப்புதல் வேண்டும் என இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

**ஒம்/– கே. கோபால்,**
ஆணையர்

பெறுநர்

அனைத்து பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்
நகல் அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள், பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை
நகல் இ 1